# செய்திக் குறிப்பு

## காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செய்திக் குறிப்பு

## தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்

வேலைவாய்ப்பு பயிற்சித்துறை மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட நிர்வாகம் இணைந்து சென்னை-79, ஒக்கியம், துறைபாக்கம், D.B ஜெயின் கல்லூரியில் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடத்திட 11.05.2018 வெள்ளிக்கிழமை காலை 9.00மணி அளவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அது சமயம் 100க்கும் மேற்பட்ட தனியார் நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகள், தங்கள் நிறுவனங்களுக்கு தேவையான 8வது தேர்ச்சி, எஸ்.எஸ்.எல்சி, +2, I.T.I, மற்றும் டிப்ளமோ, மற்றும் பட்டம் படித்த படித்த வேலைநாடுநர்களை தேர்வு செய்ய உள்ளனர். மேற்கண்ட கல்வித் தகுதிகளை உடைய வேலைநாடுநர்கள் தங்களுடைய அசல் கல்வி சான்றுகள் மற்றும் பாஸ்போர்ட் புகைப்படத்துடன் முகாமிற்கு வந்திருந்து வேலை பெற்று பயன்பெறுமாறு காஞ்சிபுரம், மாவட்ட ஆட்சி தலைவர் அவர்கள் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார். வேலைவாய்ப்பு முகாமில் கலந்துக் கொள்ள விரும்பும் வேலைநாடுநர்கள் www.ncs.gov.in என்ற இணையதள முகவரியில் தங்களை பதிவு செய்துக் கொள்ளலாம்.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
காஞ்சிபுரம்.

4/5/18